## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**நாள்** 10.12.2024

**அசல் வழக்கு எண் 24/2009**

**வா.சா.1 - கண்ணப்பன், த/பெ. வைதி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் எனக்கு சொந்தமான **560** சதுர அடி நிலத்தை விற்று விட்டார்கள் ஆகவே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். உங்கள் தகப்பனார் வைதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பேர். அவர் முறையே **1.** சுப்பிரமணி, **2.** கண்ணப்பன், **3.** சரோஜா அக்கா ஆவர். உங்கள் தாயார் **1982** ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் **1960** இல் இறந்து விட்டார் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் இறந்த பிறகு பாகம் பிரித்துக் கொண்டீர்களா என்றால் பிரித்துக் கொள்ளவில்லை. உங்கள் தாயார் இறந்த பிறகு நீங்களும் உங்கள் அக்காவும் பாகம் பிரித்துக் கொண்டீர்களா என்றால் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை. உங்கள் அண்ணன் சுப்ரமணி என்பவருக்கு பிள்ளைகள் உள்ளதா என்றால் அவர் சிறு வயதிலேயே இறந்து விட்டார். தாவா சொத்தின் பழைய சர்வே எண் **179** புதிய சர்வே எண் **516/3** ஆகும். தாவா சொத்தை எந்த வருடம் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து உங்கள் தாத்தாவினுடைய சொத்து என்றால் சரிதான் உங்கள் தாத்தாவின் பெயர் என்னவென்றால் ஊத்துக்கோட்டான் ஆகும். அந்த சொத்து எந்த வருடம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. தாவா சொத்தின் நீள அகலம் என்ன என்றால் அகலம் **40** அடி நீளம் **185** அடி ஆகும். நீங்கள் சொல்லியவாறு அளவுகள் தாவாவிலும் ஆவணத்திலும் சொல்லவில்லை என்றால் அகலம் **28** அடி, நீளம் **180** அடி. தாவா சொத்தில் **180** அடி என்று குறிப்பிடவில்லை என்றால் சரியில்லை. நீங்கள் கூறியவாறு நீள, அகலம் இல்லை வழக்கிற்காக ஆவணத்திலும் வழங்குரையிலும் சொல்லி உள்ளதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. தாவா சொத்தில் நீங்கள் இருக்கிறீர்களா என்றால் எ சொத்தில் நான் இருக்கிறேன். பி சொத்தின் என்னுடைய அக்கா இருக்கிறார். நீங்கள் கூறும் எ செட்யூல் சொத்தின் அளவு என்ன என்றால் அகலம் **20** அடி, நீளம் **180** அடி நான் இருக்கிறேன். நீங்கள் கூறும் அளவு வழக்குரையில் அதேபோல் பிரமாண வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரி இல்லை. உங்கள் சொத்துக்கு வடக்கே யார் இருக்கிறார்கள் என்றால் காலியாக இருக்கிறது. வடக்கில் உள்ள காலியிடம் யாருக்கு சொந்தமானது என்றால் என் அக்காவுக்கு சொந்தமானது. வடக்கில் காலியாக

உள்ள சொத்தின் அளவு **8** அடி**,** அகலம் **180** அடி நீளம் ஆகும்**.** அது பற்றிய வழக்குரையிலும் பிரமாணம் வாக்குமூலத்திலும் இல்லை என்றால் தெரியாது**.** சாட்சியானவர் படிக்காதவன் என்றும் ஞாபக சக்தி குறைவானவர்கள் என்றும் தெரிவிக்கிறார் அது பதிவு செய்யப்படுகிறது**.** எ செட்யூல் சொத்தில் மேற்கு பக்கம் என் வீடு உள்ளது**.** அது பிரமாணம் வாக்குமூலத்திலும் பிராதிலும் இல்லை என்றால் சரியில்லை**.** எ செட்யூல் சொத்தின் தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் காலியாக தான் உள்ளது**.** காலி மனை யாருடையது என்று உங்களுக்கு தெரியாது என்றால் அது என்னுடைய காலி மனை ஆகும்**.** தெற்கு பக்கம் காலி மனை என்பதை பிரமாண வாக்குமூலத்திலும் வழக்கிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்**.** கிழக்கு பக்கம் காலி இடம் என்றால் சரிதான் அது என்னுடைய அக்காவுக்கு சொந்தமானதாகும்**.** தாவாசொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் **1960** சதுர அடியாக உள்ளது**.** அதற்கு பட்டா வாங்கி வைத்துள்ளீர்களா என்றால் வாங்கி வைத்துள்ளேன்**.** வா**.**சா**.**ஆ **2** ல் அதற்கான பட்டா என்றால் சரிதான்**.** நீங்கள் கூறும் அளவுக்கு பட்டா வழங்கவில்லை என்றால் சரி இல்லை**.** சாட்சியானவர் ஞாபக சக்தி குறைவு என்று கூறுகிறார் அது பதிவு செய்யப்படுகிறது**.** பட்டாவில் **960** சதுர அடிக்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்**.** தாய்ப்பாத்திரம் வீட்டில் உள்ளது**.** உங்களுக்கு ஞாபகம் மறதியாக உள்ளது வேறு நபர்களை ஏன் சாட்சி போடவில்லை என்றால் சாட்சி போடவில்லை**.** உங்கள் அக்கா சரோஜா உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார்**. 2018** ஆம் ஆண்டு இறந்துவிட்டார்**.** சரோஜாவுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள்**.** இரண்டு ஆண் ஒரு பெண் ஆகும்**.** இரண்டு ஆண் பிள்ளைகள் பெயர் என்ன என்றால் பழனி மற்றும் சரவணன்**,** பெண் பெயர் கலா பழனி இறந்துவிட்டாரா என்றால் இறந்துவிட்டார் எப்பொழுது இறந்தார் என்று ஞாபகம் இல்லை**.** பழனிக்கு மூன்று பிள்ளைகள் மற்றும் மனைவி உயிருடன் உள்ளார்**.** பழனியின் பிள்ளைகள் பெயர் என்னவென்றால் தினேஷ்**,** பப்பி மற்றும் மோனிஷ் ஆகியோர் இருக்கிறார்கள்**.** மோனிஷ் என்பவர் பெயர் தான் கீர்த்தனா இரண்டு பேரும் ஒன்றுதான்**.** பப்பியை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்**.** ஷர்மிளா என்பவர் பழனியின் மனைவி ஆவார்**.** பழனியின் வாரிசுகள் எங்கே வசிக்கிறார் என்றால் பக்கத்தில் தான் வசிக்கிறார்**.** அந்த சர்வே நம்பர் தெரியுமா என்றால் என்னுடைய இடத்தில் தான் வசிக்கிறார்கள்**.** பழைய சர்வே எண் **179** ஆகும் பொது சர்வே நம்பர் **516/3** ஆகும்**.** அவர்கள் எவ்வளவு இடத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் **20** அடி அகலத்திலும் **30** அடி நீளத்திலும் வசித்து வருகிறார்**.** அது தளம் போட்ட வீடு என்றால் சரிதான் எத்தனை மாடி என்றால் ஒரு மாடி தான்**.** நீங்கள் வசிக்கும் இடம் தளம் போட்ட வீடு என்றால் சரிதான்**.** பி செட்யூல் கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் காலியாக உள்ளது அதற்கு தான் வழக்கு தாக்கல்

செய்துள்ளேன். பி செட்யூல் மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் என்னுடைய வீடு உள்ளது. அந்த சங்கதி வழக்கிலும் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரியில்லை. பி செட்யூல் சொத்தின் வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் என்னுடைய வீடு உள்ளது. அதனுடைய நீளம் அகலம் என்ன என்றால் **20** அடி அகலம் **180** அடி நீளம் ஆகும். மேற்படி சங்கதி வழக்கிலும் பிரமாணம் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியில்லை. பி செட்யூல் தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் காலியாக உள்ளது. அதுவும் என்னுடைய இடம் தான். அதனுடைய நீள அகலம் என்ன என்றால் **8** அடி நீளம் **180** அடி அகலம் ஆகும். முதல் பிரதிவாதி நாகேஸ்வரி தெரியுமா என்றால் அவர்தான் என்னுடைய சொத்தை விற்று விட்டார். நாகேஸ்வரி அந்த இடத்தில் எத்தனை ஆண்டுகள் வசித்தார்கள் என்றால் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் வசித்து இருப்பார். நாகேஸ்வரி சொத்தை விற்று விட்டார் என்று கூறுகிறீர்கள் எந்த வருடம் விற்று விட்டார் என்றால் தெரியாது. நாகேஸ்வரிக்கு அரசு சார்பில் பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. நாகேஸ்வரி **1994** இல் பட்டா வழங்கப்பட்டு அங்கு வசித்து வருகிறார் என்றால் தெரியாது. அவர் **2007** ல் சொத்தை விற்று விட்டார் என்றவரும் தெரிந்து கொண்டீர்களா என்று தெரிந்து கொண்டேன். நாகேஸ்வரியின் வாரிசுகளும் சேர்ந்து தான் சொத்தை விற்றுயுள்ளார்கள் என்றால் சரிதான் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். ராஜ்குமார் மற்றும் மதன்குமார் என்கிற தினேஷ்குமார் ஆகியோர் சேர்ந்துதான் கிரயம் கொடுத்தார்கள் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியில்லை. இரண்டாவது பிரதிவாதி துரைக்கண்ணன் சரியான அளவில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் என்னுடைய இடத்தை தான் துரைக்கண்ணு வாங்கியுள்ளார். துரை கண்ணன் எவ்வளவு இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் **8** அடிக்கு **180** அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அவர் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியில்லை. சி ஷெட்யூல் சொத்தின் வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் என்னுடைய வீடு உள்ளது. தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது. கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் என்னுடைய காலியிடம் உள்ளது. மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் என்னுடைய வீடு உள்ளது. உங்கள் பிரமாண வாக்குமூலத்திலும், பிராதுதிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியில்லை. வடக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தீர்களா என்றால் அவர் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் தான் ஆக்கிரமிப்பு உள்ளதா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரியில்லை. பிரதிவாதி என் இடத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நாகேஸ்வரி மற்றும் அவரது வாரிசுகள் பட்டா கிடைத்த பிறகு யாருடைய

இடையூறும் இன்றி தொடர்ச்சியாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியில்லை. நாகேஸ்வரியின் மூதாதையர் பட்டா கொடுப்பதற்கு முன்பாகவும் அந்த இடத்தில் ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியில்லை. இரண்டாம் பிரதிவாதி உரிய மறுபயனுக்கு தான் சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியில்லை. ஆக்கிரமிப்பு என்பது உங்களுடைய கற்பனை அவ்வாறு எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியில்லை. பட்டா ஆவணத்தின் படி குறைந்த அளவு சொத்து உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது அதை நீங்கள் மிகைபடுத்தி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நாகேஸ்வரி விற்றசொத்தின் சர்வே எண் **516/6** என்றால் சரிதான். நாகேஸ்வரி உங்களுடைய இடத்தை கொடுக்கவில்லை அவருடைய இடத்தை தான் கிரயம் கொடுத்தார் என்றால் சரியில்லை. உங்களுடைய சர்வே எண்ணுக்கும் அவர்களுடைய சர்வே எண்ணுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. வாதியின் சொத்துக்கும் பிரதிவாதியின் சொத்துக்கும் சர்வே எண் சம்பந்தமில்லாமல் உள்ளது என்றால் சரி இல்லை. தாவாவில் கோரிய பரிகாரம் உங்களுக்கு வழங்குத்தக்கதல்ல தாவ தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd-/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.